---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா யூத் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் கம்பனியின் (''கம்பனி'') 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்குவதற்கு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமை அறிக்கை, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான உருப்படிகளை மாற்று முறைகள் மூலம் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ என்னால் முடியவில்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கை காலத்தின் முடிவிலும் சொத்துக்கள் தொடர்பாக மதிப்பிழப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, தேவையான ஒதுக்கீடுகள் கணக்குகளில் சரிசெய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியில் காணப்படும் ரூபா 68,730,649 பெறுமதியான 05 ஆண்டுகளுக்கான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளுக்கு வருடாந்த மதிப்பிழப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தேவையான ஒதுக்கீடுகள் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாமல் இருந்தன. | 2024/2025 நிதி ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க கணககுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் பெறவேண்டிய கடன்பட்டோர் மீதிகளுக்காக மதிப்பிழப்பு மதிப்பீடொன்று மேற்கொண்டு உரிய சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணககீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் காசு இருப்பு ரூபா. 2,778,140 ஆக இருந்த போதிலும், பௌதீக ரீதியாக நேரடியாக இல்லாத காரணத்தால், அந்தத் தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது, அக்காசு மீதியை காசு மற்றும் காசுகளுக்கு சமமானவற்றில் இணையானவையாகக் காட்டப்பட்டிருந்ததால், அந்த | எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக | நிதிக் கூற்றுக்களில் உள்ள தகவல்களின் முழுமை, சரியானதன்மை இருப்பு, உரிமை போன்ற விடயங்கள் சரிபார்க்கப்பட வேண்டும். மோசடி நடந்திருந்தால், அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசுப் பாய்ச்சல் சரியாக இல்லை என்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில், முன்னைய ஆண்டிற்கான நிறுத்தி வைக்கப்பட்ட வருமானாக ரூபா. 1,413,305 சரிசெய்யப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், அந்தச் சீராக்கங்களின் சரியானதன்மையைச் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2023/2024 நிதி ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மூலம் இது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்பதாக. | முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் தகவல் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கம்பனியின் உணவகத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 1,489,015 தொகையை காசு மீதியில் காண்பிப்பதற்கு பதிலாக ஏனைய பெறவேண்டியவைகளாகக் காட்டப்பட்டதன் காரணமாக, காசு மற்றும் காசுக்கு சமமானவை அத் தொகையை விடக் குறைவாகவும், ஏனைய பெற வேண்டியவைகள் அதிகமாகவும் காட்டப்பட்டுள்ளன. | அடுத்த நிதியாண்டில் இதைச் சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள் சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், மேலும் சரியான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 160,680,916 ஆன வியாபார கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 155,202,056 ஆன மீதிகள் அதாவது 97 சதவீதம் கம்பனியின் பிரிவுகளுக்கு இடையே தீர்வு செய்யப்படாத மீதிகளாக இருந்த போதிலும், அவற்றைச் சரிசெய்து இணக்கம் செய்ய கம்பனி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அம்மீதிகள் குறித்து கணக்காய்வுக்குப் போதுமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால், அவற்றின் இருப்பைச் கணக்காய்வினாலும் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இந்த மீதிகள் உருவான விதம் குறித்து விசாரிக்கப்பட்டு, அவற்றைச் சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பிரிவுகளுக்கு இடையேயான மீதிகள் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் சமன்படுத்தப்பட வேண்டும். . |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடமிருந்து பெற வேண்டியவை | 203,915,759 | 202,069,519 | 1,846,240 | 2024/2025 நிதியாண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்கண்டு, தாமதமின்றி அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு செலுத்த வேண்டியவை | 1,341,156 | இல்லை | 1,341,156 | அடுத்த நிதியாண்டில் இதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கடன்கொடுத்தோர் மீதிகளை இணங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா மில்லியன் | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 2 | வருடாந்த பொருட்கள் கணிப்பீட்டு அறிக்கைகள் | 2023/2024 நிதியாண்டு தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல்ளுக்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க, எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேவையான எழுத்துமூலச் சான்றுகளை விரைவில் சமர்ப்பித்தல் வேண்டும் |
| இருப்புக்கள் | 1.7 | இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைகள் | | |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய பெறுமதி | 41.3 | மீதி உறுதிப்படுத்தல், அட்டவணைகள் மற்றும் ஏனைய சான்றுகள் | | |

| | | |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதி | 32.8 | அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல், |
| கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் | 86.7 | தொடர்புடைய நாட்குறிப்புப் பதிவுகளின் சரியான தன்மையைச் சரிபார்க்கத் தேவையான சான்றுகள் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 28,395,326 ஆன ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 35,608,200 ஆன ஏனைய பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் நீண்ட காலமாக உள்ள தொகைகள் தொடர்பாக ஆராயப்பட்டு, சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | அதிக காலம் காணப்படுகின்ற செலுத்த மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 29,931,673 ஆக இருந்த வியாபார கடன் கொடுத்தோர் மீதியில் அடங்கியிருந்த ரூபா. 13,435,657 மீதி 01 மற்றும் 09 ஆண்டுகளுக்கு இடையில் தீர்க்கப்படாமல் இருந்ததுடன், இந்த மீதிகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகளும் மிகவும் பலவீனமாக இருந்தன. | நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இந்தத் தொகைகள் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | நீண்ட காலமாக செலுத்த வேண்டிய தொகைகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்கான நல்லாளுகை தொடர்பான செயற்பாட்டுக் கைநூல் மற்றும் வழிகாட்டல் கோவை | | | |
| (i) | வழிகாட்டல் கோவையின் 2.3 ஆம் பந்தி | தந்திரோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவை தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சின் செயலாளர் வழியாகப் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2026/2028 ஆம் ஆண்டுக்கான தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தைத் தயாரித்து, சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சிடம் சமர்ப்பிப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைகளுக்கு இணங்கத் தந்திரோபாயத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | வழிகாட்டல் கோவை 2.3 ஆம் பந்தி | கம்பனி நிர்வாக மற்றும் நிதி கையேடுகளைத் தயாரித்து, அவற்றை பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரப் பகிர்வு தயாரிக்கப்பட்டு, 2026.03.31 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையினால் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | கம்பனிக்குப் பொருந்தக்கூடிய ஒரு நிர்வாக மற்றும் நிதி நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 திசெம்பர் 14 ஆந் திகதி PED 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கணக்காய்வு குழுக் கூட்டங்களிற்காக உரிய சட்டங்களின் பிரகாரம் திறைசேரி பிரதிநிதி ஒருவரை பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிப்பதற்கு உறுப்புரையில் சட்டத்தில் எந்த ஏற்பாடும் இல்லை என்றாலும், திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் அவதானிப்பாளராக (Observer) நியமிக்கப்பட வேண்டிய போதிலும் | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்த ஒரு அரசு கம்பனியொன்றாகச் செயல்பட்டாலும், அரச முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படாததால், அதற்காக எதிர்வரும் நடவடிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களுக்கான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதித்துவத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காய்வுக் குழு கூட்டங்களுக்கு திறைசேரி பிரதிநிதி பார்வையாளராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் கணக்காய்வுக் குழுவிற்கு திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படவில்லை. | எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16.55 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 15.52 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1.03 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது கடந்த ஆண்டிற்கு ஒப்பாக பாடநெறி வருமானம் 104 சதவீதத்தினால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களை கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்து அதிகரித்தல் அல்லது குறைவுகளின் பெறுமதி அந்த சதவீதத்துடன் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | 2023 | 2022 | வேறுபாடு சாதகம் / (பாதகம்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | % |
| **வருமானம்** | | | | |
| பாதுகாப்பு சேவை | 115.80 | 102.38 | 13.42 | 13 |
| சுத்திகரிப்பு சேவை | 27.24 | 22.36 | 4.88 | 22 |
| சிற்றுண்டிச்சாலை வருமானம் | 23.66 | 35.03 | (11.37) | (32) |
| அச்சிடல் வருமானம் | 2.63 | 7.07 | (4.45) | (63) |
| பாடநெறி வருமானம் | 36.93 | 18.10 | 18.83 | 104 |
| ஏனையவை | 0 | 13.38 | (13.38) | (100) |
| **செலவினம்** | | | | |
| பாதுகாப்பு சேவை | 111.01 | 86.01 | (25.01) | (29) |
| சுத்திகரிப்பு சேவை | 23.64 | 17.75 | (5.89) | (33) |
| சிற்றுண்டிச்சாலை செலவினம் | 35.36 | 40.35 | 4.99 | 12 |

| | | | | |
|---|---|---|---|---|
| அச்சிடல் செலவினம் | 5.37 | 9.43 | 4.06 | 43 |
| பாடநெறி செலவினம் | 14.15 | 10.75 | (3.40) | (31) |
| ஏனையவை | 0.47 | 18.60 | 18.13 | 97 |

கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடநெறிகளின் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 18.83 மில்லியன் அல்லது 104 சதவீதம் அதிகரித்திருந்த போதிலும், கம்பனி உருவாக்கப்பட்ட நோக்கத்திற்குரிய செயற்பாடுகளான உணவகம் மற்றும் அச்சகத்திலிருந்து வருமானம் ஈட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கம்பனியின் இலாப வீதம் யாவும் நேர்ப் பெறுமதியைக் கொண்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து அந்த விகிதம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **இலாப விகிதம் (சதவீதம்)** | **2022/ 2023 ஆண்டு (சதவீதம்)** | **2021/2022 ஆண்டு (சதவீதம்)** |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 7.37 | 6.86 |
| மொத்த இலாப விகிதம் | 86.61 | 78.19 |
| சொத்துக்கள் நலன் விகிதம் | 7.14 | 6.78 |
| மூலதன விளைவு விகிதம் | 14.77 | 16.26 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் மொத்த இலாப எல்லை சராசரியாக 80 சதவீதமாக இருந்த போதிலும், பாதுகாப்பு சேவைச் செலவுகள் 21 சதவீதமும், துப்பரவு சேவைச் செலவுகள் 33 சதவீதமும் அதிகரித்ததன் காரணமாக, தேறிய இலாப எல்லை 7 சதவீத நிலைக்குக் கொண்டுவந்து, மொத்த இலாப எல்லையை அதிகரிப்பதன் மூலம் ஒரு முறையான பெறுபேற்றை பெற்றுக்கொள்ள கம்பனி தவறியிருந்தது.

(ஆ) கம்பனியின் ஏற்கனவே உள்ள பயன்படுத்தப்படாமல் இருக்கும் சொத்துக்களைத் செயற்திறனாக பயன்படுத்தி, சொத்து மீதான வருவாய் விகிதத்தை அதிகரிப்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனிக்காக பிரயோக ரீதியில் செயற்படுத்த கூடிய தந்திரோபாயத் திட்டம் (Strategic Plan) மற்றும் தொழிற்பாட்டுத் திட்டம் (Business Plan) இல்லாததன் விளைவாக, குறைந்த இலாப எல்லைகள் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கு காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டில் உபகரணங்கள் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா. 3,741,584 முற்பணத்திற்கு ஈடாகப் பொருட்கள் வழங்கப்படாத போதிலும், இந்தப் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பொறுப்பான நபர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களிடமிருந்து இந்தத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | பொறுப்பான தரப்பினர் அடையாளம் காணப்பட்டு, ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1982 செப்டம்பர் 16 ஆந் திகதிய 331 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை வழங்கும் ஒரு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவுதற்கு தேவையான நிதியை வழங்குதல் மற்றும் இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை செயல்படுத்துவதே இந்த கம்பனியை நிறுவுவதன் முக்கிய நோக்கமாக இருந்ததுடன். இந்த நோக்கங்களை அடைவதற்காக ஜப்பானிய மொழி மற்றும் திறன் பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் 2021/2022 முதல் 2022/2023 நிதியாண்டு வரை நடத்தி ரூபா. 36,929,000 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதும், ஆனால் இந்தப் படிப்புகள் 2023/2024 நிதியாண்டிலிருந்து இப்பாடநெறிகள் இடைநிறுத்தப்பட்டன. | 2021/2022 நிதியாண்டில் செயற்படுத்தப்பட்ட ஜப்பானிய மொழித் திறன் பயிற்சிப் பாடநெறி, அக்காலத்தில் நிலவிய சில சிக்கல்கள் மற்றும் அதை முறையாகப் நடாத்திச் செல்லும் தேவைப்பாட்டின் பேரில் இடைநிறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. | நிறுவனத்தின் பிரதான நோக்கத்தை அடைவதற்காக, தொடர்புடைய திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் 05 பணிப்பாளர் சபை பதவிகளில் 03 வெற்றிடங்களாக காணப்படுவதுடன் அவை விசேட அறிவும் அனுபவமும் கொண்ட நிபுணர்களைக் கொண்டு அவற்றை நிரப்பத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டு முதல் கம்பனிக்காக ஒரு கணக்காளரை நிரந்தர அடிப்படையில் நியமிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக மேலதிகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | பதவியணியினர் மற்றும் பணிப்பாளர் சபை வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்கான நல்லாளுகை தொடர்பான செயற்பாட்டுக் கைநூலின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினருக்காக (cadre) திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் தேவைக்கேற்ப புதிய ஆட்சேர்ப்புகளையும் பணியாளர் திருத்தங்களையும் மேற்கொண்டு, அதற்கான மேலதிக அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வேண்டும். | பதவியணியினக்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கம்பனிகளில் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட | 2025/2026 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

வேண்டியிருந்த போதிலும் 2022/2023 கணக்காண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2025 திசெம்பர் 19 ஆம் திகதி அதாவது 02 வருடங்களும் 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5. ஏனைய விடயங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (1) | 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி மற்றும் 20 ஆம் திகதிகளிலும் மற்றும் 2025 மார்ச் 19 ஆம் திகதியிலும் நடைபெற்ற முறையே பொதுமுயற்சிகள் குழுவினதும் (COPE) மற்றும் அந்த குழுவின் உப குழு கலந்துரையாடல் குறிப்பின் பிரகாரமும் கம்பனியினால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் குழு பரிந்துரைகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| • | கம்பனியின் எதிர்கால நிலைத்திரு தன்மை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் நிலைத்திரு தன்மையின் தேவை மற்றும் அது இலங்கை யூத் சேர்விசஸ் (தனியார்) லிமிடட் கம்பனியின் கீழ் செயற்படுகின்றதன் தேவை தொடர்பாகவும், கம்பனியின் அகவிதியில் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும் தேவையான நடவடிக்கை எடுத்தல். | கம்பனியின் எதிர்கால நிலைத்திரு தன்மை தொடர்பாக கருத்திற் கொண்டு தந்திரோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தற்போது செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொதுமுயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • | கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கை பராளுமன்றத்தில் சமர்பித்தல். | ஆண்டறிக்கை தயாரித்தல் தொடர்பான ஆரம்ப செயற்பாடாக 2020/2021 2021/2022 ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொதுமுயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| • | அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான கருத்திற் கொண்டு நாளதுவரையான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து 03 மாதங்களுக்குள் உப குழுவிற்கு சமர்ப்பித்தல். | தற்போது புதிய கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் செயற்குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொதுமுயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |